# DEPOSITION OF WITNESS

## (CHAPTER OF XXV, CRIMINAL PROCEDURE CODE )
## IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, TIRUPPUR

**Case No. S.C. 12/2023**

| | | |
|---|---|---|
| Deposition of Witness for | : | PW-8/Lw-11 |
| Name | : | Mr. |
| Father Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.11.2025.

எதிரிகள் மற்றும் வழக்கறிஞர் ஆஜர்
அழைப்பாணையின் பேரில் சாட்சி வரவழைக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை

சாட்சிக்கு எதிராக நீதிமன்ற சம்பனை பெற்றுக் கொண்ட பிறகு ஆஜராக தவறியதால் பிணையில் விடக்கூடிய வாரண்டில் பிடிக்கப்பட்டு இருந்தது இன்று சாட்சி அரசு தரப்பில் ஆஜர் படுத்தப்பட்டு சாட்சியம் அளிக்க தயாராக இருப்பதாக சொன்ன காரணத்தினாலும் அதை பொறுத்து குறிப்பாக தாக்கல்

செய்ததால் சாட்சி மீது பிறப்பிக்கப்பட்ட பிடியான ரத்து செய்யப்பட்டு சாட்சியம் அளிக்க அனுமதிக்கப்படுகிறார்.

**1.** நான் தற்சமயம் ராயபுரத்தில் வசித்து வந்து டிராவல்ஸ் வைத்துள்ளேன். 21.12.2021 ஆம் தேதி என்னுடைய நண்பர் விக்னேஷும் ராயபுரத்தில் உள்ள ஆட்டோ ஸ்டாண்டில் நின்று பேசிக் கொண்டிருந்தோம். அந்த சமயத்தில் போலீசார் ஏதோ விசாரணை செய்து கொண்டிருந்தார்கள். அந்த சமயத்தில் காவல் அதிகாரி ஒருவருக்கு போன் வந்தது.

2. மின்மயானம் அருகே 3 நபர்கள் நின்று கொண்டியிருப்பதாக தகவல் வந்தது. அப்போது காவல் அதிகாரிகள் என்னையும் விக்னேஷியும் வருமாறு அழைத்துச் சென்றார்கள். சக்தி தியேட்டர் பின்புறம் உள்ள மின் மயானத்திற்கு அருகே நாங்கள் சென்றோம். போலீஸ் ஜிப் வருவதை பார்த்து மூன்று நபர்கள் ஓடி விட்டார்கள். அவர்களை துரத்திச் சென்று போலீசார் பிடித்தார்கள். அவர்களை விசாரணை செய்தார்கள்.

3. அப்போது அவர்கள் 20 ஆம் தேதி இரவு கார்த்திகேயன் என்பவரை மன்னரை அருகில் உள்ள கருப்புராயன் கோயில் அருகே வெட்டிவிட்டதாக காவலாதிகாரியிடம் சொல்லி வந்தார்கள். அதை லேப்டாப்பில் காவல் அதிகாரி பதிவு செய்தார். அங்கு விசாரணைக்காக வைத்திருந்த மூன்று நபர்களில் இரண்டு நபர்கள் அவ்வாறு சொன்னார்கள். மடிக்கணினில் அவர்கள் சொன்னதை பதிவு செய்த காவல் அதிகாரி அதை பிரிண்ட் எடுத்தார். வாக்குமூலம் கொடுத்த நபர்களிடம் கையொப்பம் பெற்றார்கள். அதன் பிறகு நானும், விக்னேஷும் சாட்சியாக கையொப்பம் செய்தோம்.

4. தற்போது எதிரி சுகன்ராஜ் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். அதேபோல் மற்றொரு எதிரி பழனி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். அப்போது போலீசார் விசாரணையில் வாக்குமூலம் கொடுத்த இரண்டு எதிரிகளும் அவர்களை அழைத்துச் சென்றால்

அருவாளை எடுத்து தருவதாகச் சொன்னார்கள். அவர்கள் காவல் அதிகாரிகளை என்னையும் கருமாரம்பாளையம் அழைத்துச் சென்றார்கள். அங்கிருந்த புதரில் இருந்து அருவாளை எதிரி சுகன்ராஜ் எடுத்து போலீசாரிடம் கொடுத்தார்.

5. போலீசார் அதை ஆவணமாக தயார் செய்து அருவாளை வாங்கிக் கொண்டார்கள். ஆவணத்தில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். அருவாளை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும். அதன் பிறகு எதிரி பழனி எங்களை மணியம்காரம்பாளையம் அருகே உள்ள ஒயின்ஷாப்பிற்கு அழைத்துச் சென்றார். அங்கிருந்து செடிக்குள் இருந்து ஒரு அருவாளை எதிரி பழனி எடுத்து காவல் அதிகாரியிடம் கொடுத்தார். அந்த சமயத்தில் அருவாளை பெற்றுக் கொண்ட போலீசார் ஆவணம் தயாரித்தார்கள் அதில் நான் கையொப்பம் செய்துள்ளேன்.

6. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணத்தில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது. இரண்டு அருவாள்களையும் என்னால் அடையாளம் காட்ட முடியும். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் இரண்டு அருவாள்தான் அப்போது போலீசார் கைப்பற்றியது. எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ–6. இரண்டாவது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ–7. முதல் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட அருவாளுக்குரிய கைப்பற்றுதல் மகஜர். அ.சா.ஆ–8. இரண்டாவது எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட அருவாளுக்குரிய கைப்பற்றுதல் மகஜர். அ.சா.ஆ–9. முதல் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட அருவாள் ச.பொ–1. இரண்டாவது எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட அருவாள் ச.பொ–2.

7. ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்த எதிரிகளை என்னால் அடையாளம் காட்ட முடியும். திறந்த நீதிமன்றத்தில் ஆஜராகி இருந்த 1,2,4 எதிரிகளை சாட்சி பார்த்துவிட்டு சரியாக ஞாபகம் இல்லை என்று கூறுகிறார். பேர்

தெரியாதா ஆளையே அடையாளம் காட்ட முடியாதா என்று அரசு தரப்பு வழக்கறிஞர் கேட்டபோது பெயர் தெரியாது. அடையாளம் காட்ட முடியும் என்று சாட்சி கூறினார். சாட்சி முதல் மற்றும் இரண்டாவது எதிரிகளை அடையாளம் காட்டினார். இதைப் பொறுத்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. எவ்வளவு ஆண்டுகளாக கார் ஓட்டி வருகிறேன் என்றால் 7 ஆண்டுகளாக ஓட்டி வருகிறேன். எந்த கார் ஸ்டாண்டில் கார் ஓட்டுகிறேன் என்றால் ராயபுரம் கார் ஸ்டாண்டில் ஓட்டுகிறேன். நான் வசிக்கும் முகவரி உள்ள வீடு நான் கார் ஓட்டும் ஸ்டாண்ட் ஆகியவை இரண்டும் திருப்பூர் வடக்கு பிரிவு காவல் நிலைய எல்லைக்குள் வருகிறது என்றால் சரி. தொழில் சம்பந்தமாக வடக்கு காவல் நிலையத்திற்கு செல்லும் வழக்கம் உண்டு என்றால் வாடகைக்கு அழைத்தால் செல்வேன். கார் ஸ்டாண்டிற்கும் வடக்கு காவல் நிலையத்திற்கு இடையே எவ்வளவு தொலைவு என்றால் 1.50 கிலோமீட்டர்.

2. போலீசார் விசாரணையில் அன்றைய தேதியில் என்னை நேரில் அழைத்தார்களா அல்லது ஃபோன் மூலம் அழைத்தார்களா என்று தெரிவித்துள்ளேன் என்றால் நேரில் அழைத்தார்கள். அம்மாதிரி போலீஸ் விசாரணையில் சொன்னேனா என்றால் சொல்லியுள்ளேன். எத்தனை காவல் அதிகாரிகள் என்னை வந்து அன்றைய தேதியில் அழைத்துச் சென்றார்கள் என்றால் ஞாபகம் இல்லை. எதிரிகள் கைது செய்ததாக சொல்லும் இடத்தில் கடைகள் எதுவும் இல்லை என்றால் சரி. கைது செய்ததாக சொல்லும் சமயத்தில் எவ்வளவு நேரம் அந்த இடத்தில் இருப்பீர்கள் என்றால் பகல் 12 மணிக்கு சென்று பகல் 3 மணி வரை இருந்தோம்.

3. கையொப்பம் செய்த ஆவணங்கள் ஒரே இடத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றால் தவறு. நானும் மற்றொரு சாட்சி விக்னேஷும் ஒரே

இடத்தில் வைத்துத்தான் கையொப்பம் செய்தோம் என்றால் சரி. எதிரிகள் கைது செய்ததாக சொல்லும் இடத்திற்கும் கருமாரபாளையம் முயல் ஆற்றங்கரை எவ்வளவு தூரம் என்றால் 1 ½ கி.மீ. எதிரிகள் கைது செய்ததாக சொல்லும் இடம் அதிக மக்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் ஓரளவுக்கு நடமாட்டம் உள்ள பகுதி. கருமாரம்பாளையம் மது கடை உள்ள பகுதியும் பொதுமக்கள் அதிக நடமாடும் பகுதி என்றால் ஆமாம்.

4. காவல் அதிகாரிகள் அருவாளை கைப்பற்றிய பிறகு அளந்து பார்த்தார்களா என்றால் இல்லை. ச.பொ– 1,2 எல்லா இடங்களிலும் கிடைக்கக்கூடிய ஆயுதங்கள் என்றால் ஆமாம். ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் ஆகியவற்றில் முதல் விசாரணையில் சொல்லி உள்ளவாறு சொன்ன இடத்தில் நான் கையொப்பம் செய்யவில்லை என்றால் தவறு. நான் தான் செய்தேன். எதிரிகள் முதல் விசாரணையில் நான் சொல்லி உள்ளவாறு என் முன்னிலையில் கைது செய்யப்படவில்லை. எந்த ஒரு எதிரியும் தன்னிச்சையாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை. அதன் அடிப்படையில் எந்த ஆயுதங்களும் கைப்பற்றவில்லை என்றால் தவறு.எதிரிகளை இன்று நீதிமன்றத்தில் போலீசார் அடையாளம் காட்டித்தான் அடையாளம் காட்டுகிறேன் என்றால் தவறு. வழக்கு எதிரிகளை நான் இதற்கு முன்பு பார்த்ததில்லை என்றால் தவறு.ஆவணங்களில் நான் செய்துள்ள கையொப்பங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் காவல் அதிகாரிகள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க கையொப்பம் செய்தவை என்றால் தவறு.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2025.11.06 18:37:47 +0530

கூடுதல் உதவி அமர்வு நீதிபதி,
திருப்பூர்.